செ.வெ.எண்.07 நாள்.03.11.2017.

திருநெல்வேலி மாநகராட்சி மகாராஜநகர் மற்றும் உழவர் சந்தை அருகிலுள்ள மாநகராட்சி வணிக வளாக பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மெகா தூய்மை பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று அதிகாலையில் வீடு, வீடாக சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

--------

திருநெல்வேலி மாநகராட்சி மகாராஜநகர் மற்றும் உழவர் சந்தை அருகிலுள்ள மாநகராட்சி வணிக வளாக பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மெகா தூய்மை பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.11.2017) அதிகாலையில் வீடு, வீடாக சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

மகாராஜநகர் 23வது குறுக்குதெரு பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வீடு, வீடாக சென்று டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை ஆய்வு செய்தார். இத்தெருவில் செயல்பட்டு வரும் மதுரம் கேட்டரிங் சர்வீஸ் நிறுவன பகுதியில் டெங்கு கொசு உருவாகும் கொசு புழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அந்நிறுவனத்திற்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்க மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இப்பகுதியில், பாட்டில்களை சாலையோரங்களில் தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தியாகும் வகையில் போட்டு வைத்த பாலாஜி கெமிக்கல்ஸ் கடை உரிமையாளருக்கு நோட்டீஸ் வழங்கவும், அபராதம் விதிக்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார். தொடர்ந்து உழவர் சந்தை அருகிலுள்ள மாநகராட்சி வணிக வளாகம் உள்ள மைதானத்தில் மெகா துப்புரவு பணிகளை பார்வையிட்ட, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கு நிறுத்தப்பட்டுள்ள பழைய வாகனங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள டயர்களை உடனடியாக அப்புறப்படுத்தவும், அப்பகுதியில் உள்ள பழைய வாகனங்களையும், குப்பைகளையும் உடனடியாக அப்புறப்படுத்தவும் உத்தரவிட்டார். மாநகராட்சி வணிக வளாகத்திலுள்ள கடைகளுக்கு சுகாதாரமின்மையாக இருந்தமைக்கான நோட்டீஸ் வழங்கவும் உத்தரவிட்டார். இப்பகுதி சுகாதார பணியாளர்கள் மற்றும் கொசு ஒழிப்பு பணியாளர்களிடம் டெங்கு காய்ச்சல் இப்பகுதியில் உள்ளது, கண்டறியப்பட்டுள்ளது. எனவே, துப்புரவு மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் உத்தரவிட்டார்.

ஆய்வின் போது, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாநகர நல அலுவலர் மரு.பொற்செல்வன், உதவி ஆணையர் திரு.வசந்தராஜன், வட்டாட்சியர் திரு.தங்கராஜ், மற்றும் சுகாதார அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.